



திருவண்ணாமலையில் நடைபெற்ற வடக்கு மண்டல, சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை பகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையேற்று, ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் த.உதயசூரியன், சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன், தொகுதி பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன், வ.அன்பழகன் ஆகியோர் உடன் இருந்தனர்.



கமுதி ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று 'சிறை சென்றவர். 'மிசா'வில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர். அனைவரிடமும் அன்பு காட்டி, அயராது உழைத்து கழகத்தை வளர்த்தவர் என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட முன்னாள் எம்.எல்.ஏ. காதர் பாட்சா வெள்ளைச்சாமி அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில், அவரின் குடும்பத்தார்கள் மற்றும் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் மற்றும் முன்னாள் அமைச்சர் சத்தியமூர்த்தி, டாக்டர் சுந்தர்ராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முத்துராமலிங்கம், முருகவேல் மற்றும் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக, நிர்வாகிகள் தொண்டர்கள் மகளிர் அணி நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சிக்கு வந்த 10,000 க்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

### தென்காசி மாவட்டம் - வாசுதேவ நல்லூர் - நெற்கட்டும் செவலில்

# மாமன்னன் பூலித்தேவன் 310 வது பிறந்த நாள் இன்று!

## மணிமண்டபத்தில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு மரியாதை!

தென்காசி, செப். 1 -

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெற்கட்டும் செவலில் இன்று (01.09.2025 திங்கள் கிழமை) காலை 10 மணி அளவில் மாமன்னன் பூலித்தேவன் அவர்களின் 310 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நெற்கட்டும் செவலில் மாமன்னன் பூலித்தேவன் மணிமண்டபத்தில் அமைந்துள்ள மாமன்னன் பூலித்தேவன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன் ஆகியோர் பங்கேற்று அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர், தனது அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது :-

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி, வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நெற்கட்டும் செவலில் முதல் சுதந்திர போராட்ட வீரர் மாமன்னன் பூலித்தேவன் அவர்களின் 310 வது பிறந்த நாள் விழா இன்று (01.09.2025 - திங்கட் கிழமை) காலை 10 மணி அளவில் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பங்கேற்று நெற்கட்டும் செவல் மணிமண்டபத்தில் அமைந்துள்ள மாமன்னன் பூலித்தேவன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு, மாவட்ட அவைத் தலைவர் சுப்பையா, துணை செயலாளர்கள் புனிதா ராஜதுரை, மனோகரன், பொருளாளர் இல.சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் வேலுச்சாமி பாண்டியன், சாகுல் ஹமீது, மாரிச்சாமி,தேவதாஸ், பராசக்தி, மகேஸ்வரி, மாரிச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் பொன் முத்தையா பாண்டியன், லாலா சங்கரபாண்டியன் கடற்கரை, பெரியதுரை, கிறிஸ்டோபர், சேர்மத்துரை, ராமச்சந்திரன், வெள்ளத்துரை,அன்புக்கரசு,நகர செயலாளர்கள் பிரகாஷ், அந்தோணி சாமி, நாகூர்கனி,பேரூர் செயலாளர் குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நெல்லை மாவட்டம் - பாளையங்கோட்டையில்

# 'நலம் காக்கும் ஸ்டாலின்' சிறப்பு மருத்துவ முகாம்!

## மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. – மேயர் கோ.இராமகிருஷ்ணன் பங்கேற்பு!

நெல்லை, செப்.1 –

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை தூய யோவான் பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் திட்டத்தை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் – பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப் பார்வையிட்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், ஆணையாளர் மரு. மோனிகா ராணா,துணை மேயர் ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் திட்டத்தினை கடந்த 02.08.2025 அன்று தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதனடிப்படையில்,இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு திசைய ன்விளையிலும், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்திற்கு கல்லிடைக்குறிச்சி யிலும்,களக்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு களக்காடிலும் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் " 5476 நபர்கள் கலந்து கொண்டு உடல்பரிசோதனை செய்து கொண்டனர். அதில், 67 நபர்களுக்கு தீவிர நோய்கள் கண்டறியப்பட்டு உயர்சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

இம்முகாமில் அடிப்படை சிகிச்சை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மின் இதய வரைபடம், எக்கோ, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எக்ஸ்ரே மற்றும் முழுமையான இரத்தப்பரிசோதனை, காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறிதல் பரிசோதனைகளும், ஆரம்ப கட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் போன்ற அனைத்து பரிசோதனைகளும் கண்டறியப்படும்) மேலும் பொது மருத்துவம்,அறுவை சிகிச்சை, இதயவியல்,மகப்பேறு மருத்துவம் எலும்பு மற்றும் நரம்பியல், மனநலம்,நுரையீரல், தோல் நோய், காது,மூக்கு,தொண்டை மருத்துவம்,கண் மருத்துவம்,பல் மருத்துவம்,ஆயுஷ் மற்றும் இயன்முறை சிகிச்சை போன்ற 17 வகையான சிறப்பு மருத்துவம் மற்றும் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடுத்திட்டத்தின் கீழ் பதிவு செய்தல், மாற்றுத்திறனாளி களுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குதல் போன்ற சேவைகளும் இம்முகாமில் வழங்கப்படுகிறது. மேலும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பிரச்சார மும் சரியாக உண்ணுங்கள் இயக்கம் மூலம் பெற்றோர்களுக்கும்,குழந்தைகளுக்கும் அறிவுரைகள் வழங்கப்படும்.

நெல்லை மாநகராட்சி பகுதிகளுக்கு தூய யோவான் பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் சுமார் 1581 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.இது வரை 15 நபர்களுக்கு மேல் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டது. திருநெல் வேலி மாவட்டத்தில் இன்னும் 26 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளது. ஒவ்வோரு சனிக்கிழமையும் இந்த முகாமில் 17 சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொண்டு பல்வேறு பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்குவார்கள்.பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதிகளில் நடைபெறும் இம்முகாமில் கலந்து கொண்டு அனைத்து சிறப்பு மருத்துவ பரிசோதனைகள் மற்றும் அறிவுரைகள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நடைபெற்று வரும் "நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்களில் ஏழை, எளிய மக்கள் பெரிய அளவில் பரிசோதனை மேற்கொண்டு உரிய சிகிச்சை பெற்று பயனடைந்து வருகின்றனர். என்பது குறிப்பிடத்தக்க தாகும். எல்லாருக்கும் எல்லாம் இதுதரின் திராவிட மாடல் ஆட்சியாகும்.




# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் : 20.04.1958 | மறைவு : 31.08.2025

சேலம் மாவட்ட தி.மு.கழக செயலாளரும்,
தமிழ்நாடு வேளாண்மைத் துறை முன்னாள் அமைச்சருமான
மறைந்த திரு. வீரபாண்டியார் அவர்களின் துணைவியாரும்

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி அமைப்பாளர்
Dr. வீரபாண்டி ஆ.பிரபு M.B.B.S., அவர்களின் தாயாருமான

திருமதி. A.லீலா ஆறுமுகம் அவர்கள்

நேற்று 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.58 மணியளவில் காலமானார்
என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.
அம்மையாரது உடல் ஏற்காடு அடிவாரம், கன்னங்குறிச்சி மெயின் ரோடு,
AVR கிருஷ்ணா வில்லாவில் வைக்கப்பட்டு, இறுதிச் சடங்கு இன்று 01.09.2025 திங்கட்கிழமை
நண்பகல் 12.00 மணியளவில் பூலாவரியில் நடைபெறும்.

SHARP 86808 94999

சேலம் மாவட்ட தி.மு.க